நாள்.25.10.2012

**செய்தி வெளியீடு எண்: 641**

**பத்திரிக்கை செய்தி**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி இன்று **25.10.2012** மாலை மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.ஆர்.காமராஜ் அவர்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை வடக்கு மண்டலத்திலுள்ள, நாராயணப்பிள்ளை பொது விநியோக திட்ட கிடங்கில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். கடந்த ஒரு வாரகாலமாக வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருவதால் பொது விநியோக திட்ட கிடங்குகளிலும், நியாயவிலை அங்காடிகளிலும்,அனைத்து அத்தியாவசியப்பொருட்களும் தேவையான அளவு கையிருப்பில் உள்ளதை உறுதி செய்ய வேண்டுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார். இதன்படி மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் மேற்படி கிடங்கினை ஆய்வு செய்து அனைத்து அத்தியாவசியப்பொருட்களும் போதுமான அளவு கையிருப்பில் இருப்பதையும், நியாயவிலை அங்காடிகளுக்கு குடிமைப்பொருள் வழங்கல் துறை ஆணையாளரின் மாதாந்திர ஒதுக்கீடு உத்தரவின்படி அத்தியாவசியப் பொருட்கள் அவ்வப்போது நகர்வு செய்யப்படுதையும், தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் மூலமாக கண்டறிந்தார்.

கிடங்கில் இருப்பிலுள்ள விலையில்லா அரிசி, சர்க்கரை, பருப்பு வகைகள் முதலின மழைக்காலங்களில் காற்றிலுள்ள ஈரப்பதம் உறிஞ்சப்பட்டு (Atmospheric moisture) சேதமடைவதை தடுக்கும் வகையில் அனைத்து தரக்கட்டுப்பாடு நடவடிக்கைகளும் தொய்வின்றி எடுக்கப்பட வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். மேலும் கிடங்குகளில் பெறப்படும் இந்திய உணவுக்கழக அரிசி, சர்க்கரை ஆலைகளிலிருந்து பெறப்படும் சர்க்கரை,வெளிச்சந்தையில் டெண்டர் மூலம் கொள்முதல் செய்யப்படும் பருப்பு வகைகள் லாரிகளிலிருந்து இறக்கப்படும் பொழுதே அரசு நிர்ணயித்துள்ள தரக்கட்டுப்பாடு விழுக்காடுகளுக்குள் உள்ளதா என்பதை உறுதி செய்த பின்னரே இவை கிடங்கில் இறக்கப்பட வேண்டும். அவ்வாறில்லாமல் நிர்ணயிக்கப்பட்ட ஈரப்பத விழுக்காடுகளுக்கு மேலாக பொருட்கள் பெறப்பட்டால் அவற்றை கிடங்கில் இறக்காமல் சம்பந்தப்பட்ட தரக்கட்டுப்பாடு அலுவலர்களுக்கும், முதுநிலை மண்டல மேலாளருக்கும் தகவல் தெரிவித்து தக்க மேல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கிடங்கு அலுவலர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். அட்டிகளில் பூச்சித்தாக்கம் காணப்படும் இனங்களில் உடனடியாக புகை மூட்டம் செய்து அத்தியாவசிய பொருட்களை நியாயவிலை அங்காடிகளுக்கு அனுப் வேண்டும் என கிடங்கு அலுவலர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

கிடங்குகளில் மேற்கூரைகள் உடையாமல் இப்பதையும், சிறுசிறு ஓட்டைகள் மூலம் மழை தண்ணீர் கிடங்குகளில் உள்ள அத்தியாவசியப் பொருட்கள் அட்டிகள் மீது விழாமல் இருப்பதையும் உறுதி செய்யும் வண்ணம் சம்பந்தப்பட்ட அலுவலர்களை கேட்டுக்கொண்டார்.

மேலும் A.E. கோயில் தெரு, தண்டையார்பேட்டை என்ற முகவரியிலுள்ள நியாயவிலை அங்காடியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உன்னத திட்டமான விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் விலையில்லா அரிசிதரமானதாகவும், எடைகுறைவின்றியும் வழங்கப்படுகின்றதா என்று அங்காடியில் கூடியிருந்த குடும்ப அட்டைதாரர்களிடம் கேட்டறிந்தார். குடும்ப அட்டைதாரர்கள் அனைவரும் தங்களுக்கு அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் அனைத்து மாதங்களிலும்

விடுதலின்றி வழங்கப்படுவதாகவும், பொருட்கள் தரமானதாகவும்,எடைகுறைவின்றியும் வழங்கப்படுவதாக தெரிவித்தனர். தாழ்வான பகுதிகளில் அமைந்துள்ள நியாயவிலை அங்காடிகளில் மழைநீர் புகுந்துவிடாமலும்,சுற்றுப்புறங்களில் மழைநீர் தேங்கி நிற்காமலும் உறுதி செய்ய அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென அலுவலர்களை அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

மத்திய அரசு பொது விநியோக திட்டத்தின்கீழ் வழங்கும் மண்ணெண்ணெய்யின் மாதாந்திர ஒதுக்கீட்டின் அளவு கடந்த 2011 ஏப்ரல் மாதத்தில் 52,806 கி.லிட்டராக இருந்தது. ஆனால் நடப்பு ஆண்டு 2012 ஏப்ரல் மாதத்தில் இருந்து மத்திய அரசு அதை 39,429 கி.லிட்டராக குறைத்துவிட்டது. நமது மாநிலத்திற்கு தேவையான 65,140 கி.லிட்டர் மண்ணெண்ணெய்யை வழங்க வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தியும்,அதனை ஏற்காத மத்திய அரசு 39 ஆயிரத்து 429 கிலோ லிட்டர் மட்டுமே ஒவ்வொரு மாதமும் ஒதுக்கீடு செய்வதாக தெரிவித்தார். எனினும் குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் முன்னுரிமை அடிப்படையில் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது என்றும் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் செயல் திட்டங்களின் பயன்கள் முழுவதும் ஏழை எளிய மக்களை சென்றடைய அலுவலர்கள் அனைவரும் அயராது பாடுபடவேண்டும் என மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கேட்டுக்கொண்டார். இந்த ஆய்வின்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு. எம்.சந்திரசேகரன், இ.ஆ.ப., முதுநிலை மண்டல மேலாளர் திரு.பி.பாஸ்கரன், தரக்கட்டுப்பாடு மேலாளர் திரு.எம். செல்லப்பன் ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு:-**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**